பக்கங்கள்:-15

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 01 | புதன்கிழமை | 16.08.2023 | அதிர்வு 15 |
|---|---|---|---|---|---|

## தங்காலையில் சூடு ஒருவர் உயிரிழப்பு

தங்காலை, குடாவெல்ல பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

35வயதுடைய நபர் 03▶





# ஒன்றித்த நாட்டுக்குள் 13 இன் அமுலாக்கம்!

## தமது திட்டம் இதுவே என சஜித் அறிவிப்பு



பலரும் பேசிக் கொண்டிருக்கும் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் இன்றும் நாளையும் ஒரே நிலைப்பாட்டையே நாம் கொண்டுள்ளோம். ஒன்றித்த நாட்டுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரப் பரவலாக்களை நடைமுறைப் படுத்த எதிர்பார்க்கிறோம்.

- இப்படி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா தெரிவித்தார். 07▶

## மொட்டுக் கட்சியை ரணில் திறமையாகப் பிளக்கின்றார்

### புத்திசாலித்தனமாக எஞ்சியோரையாவது தக்க வையயுங்கள் என்கின்றார் வாசுதேவ



இரத்தினபுரி, ஓக.16

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை பிளவுப்படுத்தும் அரசியல் காய் நகர்த்ததை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறமையாகச் செயற்படுத்துகிறார்.

ராஜபக்ஷக்களுடன் ஒன்றிணைய வேண்டிய தேவை எமக்கில்லை. இருப்பவர்களையாவது 03▶

## எம்.பி. பதவிகளைத் தக்க வைக்க நீதிமன்றை நாடும் ஹரின், மனுஷ!

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறக் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியில் தங்களுடைய கட்சி உறுப்புரிமை இரத்து 03▶

## திக்வெல்ல பகுதியிலும் ஒருவர் சுட்டுக் கொலை

மாத்தறை – திக்வெல்ல பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மற்றொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திக்வெல்ல, போதரகந்த பகுதியில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டை நடத்திய 03▶

## இரகசியம் பரகசியம்



2005 ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ் மக்களை வாக்களிக்காமல் பகிஷ்கரிக்க செய்து, அதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்க வைத்த விடுதலைப் புலிகளின் நகர்வு தொடர்பில், புலிகள் மற்றும் 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணில் ஆகிய இருதரப்புகளுக்கும் இடையிலும் எனது ஊடாட்டம் பற்றிய விடயங்களை தொடர்ந்து தந்துள்ளேன்.

புலிகளுடனும் ரணிலுடனும் நான் பங்காற்றிய விடயங்களை பெரும்பாலும் சுருக்கமாகத் தந்து விட்டேன்.

இனி, அந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற – மூன்றாம் தரப்பான – மஹிந்த ராஜபக்ஷவுடன் நான் மேற்கொண்ட ஊடாட்டங்கள், அவற்றை ஒட்டி நான் கணிப்பிட்டுக் கொண்டவை போன்ற வற்றைச் சுருக்கமாகத் தரலாம் என்று நினைக்கிறேன்.

இதில் இரண்டு விடயங்கள். ஒன்று – அந்தத் தேர்தல் முடிந்து ஒரு சில மாதங்களுக்குப் பின்னரே இது பற்றி மஹிந்தவுடன் அவ்வப்போது உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது நான் கிரகித்துக் கொண்டவை. அடுத்தது – மற்றைய சில விடயங்கள் அப்போது கட்டவிழ்ந்த சம்பவங்களின் அடிப்படை யில் நான் ஊகித்துக் கொண்டவை.

அந்த இரண்டு விடயங்களின் தொகுப் பையும் நான் இங்கு குறிப்பிட முன்னர், மஹிந்தவுடன் தொடர்பான வேறு இரண்டு சம்பவங்களைச் சுட்ட விரும்புகிறேன்.

இந்த விவகாரத்தை ஒட்டி மேலோட் டமாகத் தன்னும் என்னுடன் மஹிந்த ராஜபக்ஷ அவ்வப்போது உரையாடி சில விடயங்களை அவர் கோடி காட்டுவதற்கு அவரது சில பண்பியல்புகளே காரணமாக இருந்தன. அவற்றை வெளிப்படுத்தவே இந்தச் சம்பவங்கள் பற்றிய விவரணம்.

2005 க்கு முன்னரே எனக்கு மஹிந்த ராஜபஷவுடன் செய்தியாளர் – அரசியல்வாதி என்ற தொடர்பு அல்லது பரிச்சயம் இருந்தாலும், 2005 நவம்பரில் அவர் ஜனாதிபதியான பின்னர், 2006 இல் புலிகளுக்கும் அவருக்குமிடையி லான சில சமரச முயற்சிகளில் எனது பங் களிப்பும் இருந்தமை காரணமாக சற்று நெருக்கம் ஏற்பட்டது. அந்தப் பரிச்சயம் இன்னமும் தொடர்கிறது. ஆனால் அது எப்போதும் நட்புறவாக – நல்லுறவாக – இருந்தது என்று கூற மாட்டேன். பல தடவைகள் பலர் முன்னிலையில் என் மீது சீறிப் பாய்ந்து என்னை அவர் மோசமாகத் திட்டித் தீர்த்தும் இருக்கிறார்.

அரசியல் மற்றும் கருத்து நிலைப்பாட் டில் நாங்கள் இரண்டு துருவங்களில் நின்றவர்கள். இப்போதும் நிற்பவர்கள். அவர் கருதும் தேசியமும், எனது ஆழ் மனதில் நிலையாக ஊறியிருக்கும் எனது தேசியமும் வெவ்வேறானவை. பல சமயங்களில் அவருக்கு எதிராக – மிக மோசமாக – மிகக் காட்டமாக – எழுதி இருக்கிறேன் என்பதிலும் பார்க்க முழங்கி இருக்கிறேன் எனக் கூறலாம். இலங்கைக்குள் இருந்து கொண்டு, நீண்ட காலம் அவர் உட்பட்ட ராஜபக்ஷக்களை தமிழ்ப் பத்திரிகைகளில் விமர்சித்தவன், அந்த விமர்சனங்களுக்கு எல்லாம் நானே முழுப் பொறுப்பு என்ற பொறுப்புரிமையை ஏற்றபடி கடுங் காட்டமாக விமர்சித்தவன் என்ற பட்டியலில் நானே முன்னிலை வகிப்பேன் என்று எண்ணுகிறேன்.

எனக்கு இன்னமும் நினைவாக இருக்கிறது. 2010ஆம் ஆண்டு ஜனவரி ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் (அவரை எதிர்த்து முன்னாள் இராணுவத் தள பதி சரத் பொன்சேகா போட்டியிட்ட தேர் தல்) அவரது அலரி மாளிகை இல்லத் தில் ஏனைய பத்திரிகை ஆசிரியர்கள் முன்னால் என்னைப் பார்த்து அவர் கூறிய விடயங்கள்.

"ஓ! இவர்தான் தன்னுடைய பத்திரிகை யில் நேற்று முன்தினம் ஆசிரியர் தலையங்கம் ஒன்று எழுதி இருக்கிறார். இந்த நடக்கப் போகின்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களுக்கு ஒரேயொரு கேள்வி தான் உண்டாம். (தங்கள் இனத்தவரை அழிக்கும் நோக்கோடு) தங்களைச் சுட்டவ ருக்கு வாக்குப்போடுவதா?அல்லது சுடச் சொன்னவருக்கு வாக்கு போடுவதா? – என்பதுதான் அக்கேள்வி என்று எழுதிய பிரகிருதி இவர்தான்" – என்று சொன்னபடி என்னைச் சீற்றத்தோடு அவர் நோக்கியமை எனக்கு இன்னமும் நினைவிருக்கிறது.

2006 இல் ஏனைய பத்திரிகை ஆசிரி யர்களுக்கு முன்னால் வைத்து, மிக மோசமாக, கடுமையான வார்த்தை களால் 'பயங்கரவாதிகளை நியாயப்படுத் துபவர்' என்ற கோணத்தில் அவர் என் னைத் திட்டித் தீர்த்தமையும், அது ஆசிய மனித உரிமைகள் கண்காணிப்பகத் தின் காலாண்டு அறிக்கையில் 'பத்திரி கையாளரை மிரட்டிய ஜனாதிபதி' என அவருக்கு எதிரான பெரும் குற்றச்சாட்டாக வெளிவந்ததும், அப்படி ஒரு சம்பவமே நடக்கவேயில்லை என்று அப்போதைய வெகுஜன ஊடக அமைச்சர் அனுர பிரி யதர்ஷன யாப்பா மறுத்ததும்,அது தவறு என்று உண்மையை என் பத்திரிகை ஊடாக நான் அம்பலப்படுத்தியமையும் அப்போது நடந்த சம்பவங்கள்.

ஏன், அவரது ஆட்சியில்தான் – யுத் தத்தின் இறுதிக் கட்டத்தில் – என் குடும்பத் தவர்கள் மற்றும் என் உறவினர்கள் பார்த்திருக்க, என் குடும்ப சாவு வீடு ஒன்றில் வைத்து வெள்ளை வானில் வந்த அவரது அதிகார வர்க்கத்தினரால் மிக மோசமான – அவமானகரமான – முறையில் கேவலப்படுத்தப்பட்டு நான் கடத்தப்பட்டேன். அப்போது நான் அனுபவித்தவற்றை எழுத்தில் வடிக்க முடியாது. சுமார் இரண்டரை மாதங்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்பு காவலிலும் இருந்தேன். அவை– யெல்லாம் அவருக்கும் எனக்கும் இடை யில் பரிச்சயமும் உரையாடல்களும் கூட ஏற்ற இறக்கங்களுடன் இருந்த காலத்தில்தான்.

அப்படி மேடும் பள்ளமும் நிறைந்த உறவுகளுக்கு மத்தியிலும், நாங்கள் இன்றும் ஒருவரோடு ஒருவர் மரியாதை யுடன் பழகும் நம்பிக்கையை வைத்திருக் கிறோம். அவற்றை ஒட்டி மஹிந்தவின் இரு சம்பவங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அவற்றைப் புரிந்து கொண்டால்தான் 2005 தேர்தல் காலத்தில் தமக்கு கிட்டிய அனுபவங்களை ஒட்டி அவர் பகிர்ந்து கொண்ட அல்லது கோடி காட்டிய விட யங்களை நான் எப்படி நம்பினேன், என் கருத்துகள் மற்றும் தகவல்களை அவர் எப்படி நம்பினார் என்ற நிலைமையை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

முதலாவது சம்பவம் காலஞ்சென்ற ஐ.தே.கட்சியின் எம்.பியான மகேஸ்வரன் தொடர்பானது.

இது 2006 அல்லது 2007 இல் நடைபெற்றிருக்கும் என்று நினைக் கிறேன். யுத்தம் உச்சமாக இருந்த சமயம். கொழும்பில் விடுதிகள், வீடுகளில் தங்கியிருந்த வடக்குக் கிழக்குத் தமிழ் இளைஞர்களை அப்போதைய பாதுகாப் புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் படையினர் பஸ்களில் சென்று நள்ளிரவில் உடுத்த உடையோடு திடீரென அள்ளி ஏற்றி, வவுனியா மற்றும் வடக்கு பஸ்களில் வடக்கே அனுப்பி விடும் கொடூரம் திடீரென அரங்கேறத் தொடங்கியது. எனினும் அடுத்த நாள் காலையிலேயே அவசர அவசரமாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்து, அந்த நடவடிக்கைக்கு எதிராகத் தடை உத்த ரவு பெறப்பட்டது. அப்போது அரசியல் பக்கமே தலைவைத்துப் படுக்காத சிரேஷ்ட சட்டத்தரணி சுமந்திரன், இந்த வழக்கில் முக்கிய பங்காற்றினார் என்று செய்தி வெளியிட்டதாக எனக்கு நினைவு உண்டு.

அந்த இளைஞர்களை ஏற்றிய பஸ் காலிமுகத்திடலைத் தாண்டிய சமயத்தில் அதற்கு குறுக்கே மனோ கணேசன், மகேஸ்வரன் போன்றவர்கள் வழிமறிப் புச் செய்து அதை தடுத்தனர் எனவும் நினைவு உண்டு.

அடுத்த நாள் நாடாளுமன்றத்தில் இது பற்றி ஆக்ரோஷமாக பேசிய மகேஸ் வரன், ஒரு கட்டத்தில் கோபத்தில் தன் னுடைய சேட்டை (மேலாடையை) கழற்றி எறிந்து விட்டு, வெறும் மேலோடு நின்று முழங்கினார். அது அப்போது பரபரப்புச் செய்தியாக வெளியானது. அப்படி இளைஞர்களை ஏற்றிப் பலவந்தமாக அப்புறப்படுத்துவது மிகப்பெரிய மனித உரிமை மீறலாகக் கருதப்பட்ட நிலைமை அன்று. அரசின் அத்தகைய நடவடிக் கையை ஆதரித்து அல்லது நியாயப்ப டுத்தி நாடாளுமன்றத்தில் பேசினால் சர்வதேச நாடுகள் குறிப்பாக மேற்கு நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் தங்களை மனித உரிமை மீறல்களுக்கு ஆதரவானவர்கள் என்று அடையாளப் படுத்தி விடும் எனக் கருதிய ஆளுந் தரப்பு அரசியல்வாதிகள் அன்று மனோ கணேசன், மகேஸ்வரன் போன்றோரின் கடும் ஆட்சேபனைக்குத் தகுந்த பதில் அளிக்காமல் நாடாளுமன்றத்தில் அமைதி பேணினர்.

அடுத்த நாள் அமைச்சரவைக் கூட்டத் தில் இதுபற்றி குறைப்பட்டு விசனப்பட்டார் மஹிந்த ராஜபக்ஷ. "நேற்று எனது அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் அவ்வளவு களேபரம் நடந்தும் உங்க ளில் எவரும் எனது அரசைக் காபந்து பண்ண முயற்சிக்கவில்லையே!" – என்று அமைச்சர்களைப் பார்த்துக் குறை கூறி னார் மஹிந்தர். அப்போது அமைச்சராக இருந்த ராஜித சேனாரத்ன மெல்லத் தலையை நீட்டி ஒரு பதிலைக் கூறி னார்.

"நாடாளுமன்றத்தில் குழப்பம் விளைவித்த மகேஸ்வரன் ஐக்கிய தேசி யக் கட்சி என்றாலும் உங்கள் நண்பர் தானே. உங்கள் நண்பர்தானே எல்லா வற்றுக்கும் காரணம்" – என்றார் ராஜித.

சடார் என அவரைத் திரும்பிப் பார்த்த மஹிந்த ராஜபக்ஷ சீற்றதுடன் "மகேஸ் வரன் இடத்தில் நான் இருந்திருந்தால் மேல் சட்டையை மாத்திரம் அல்ல, கீழே கட்டி இருக்கும் சரத்தை கூட உரிந்து எறிந்து விட்டுத்தான் பேசியிருப்பேன். அவர் நிலையில் அவர் அப்படித்தான் பேசு வார். பேச வேண்டும். நீங்கள் அல்லவா எனது அரசைக் காபந்து பண்ணியிருக்க வேண்டும்?" – என்றார் அவர்.

இதுபோன்று என்னைப் பற்றிய ஒரு கேள்விக்கும் மஹிந்த ராஜபக்ஷ பொருத் தமான ஒரு பதில் சொன்னார் என நான் அறிந்தேன். அதை வாசகர்கள் புரிந்து கொண்டால், இந்த விடயத்தை ஒட்டி இதற்கு மேல் நான் சொல்லும் விவகா ரங்களை ஓரளவு நீங்கள் புரிந்து கொள்ள முடியும். அவற்றை நாளை பார்ப் போமா?

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஆண்டியின் வேலை இது!

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' - என்பார்கள். அப்படி ஓர் ஆண்டியின் வேலையைத் தான் செய்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க என்று தோன்றுகின்றது.

கடந்த வருடம் ஜூலையில் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியான போது, இன்னும் இரண்டு வருடங்களில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரும்போது மீண்டும் வெற்றியீட்டித் திரும்பவும் அவர் ஜனாதிப தியாகத் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் மிகப் பிரகாசமாகத் தென்பட்டன.

ரணில் விக்கிரமசிங்க தவிர்ந்த ஏனைய பிரமுகர்கள் யாரும் அப்பதவிக்கு அவருடன் போட்டியிட்டு வெல்லக்கூடிய வலுவான நிலையில் அப்போதிருக்க வில்லை. அவரை எதிர்த்துத் தோற்கடிக்கக் கூடிய கட்சிகளும் வலுவான நிலையில் இருக்கவில்லை. அவையும் பிளவுண்டு, சிதறுண்டு, செல்வாக்கு மிக்க தலைமைகள் இல்லாமல் அல்லது தலைமைகளுக் கான வறுமையில் பின்னடைவு நிலையில் இருந் தன.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பழம் தன்பாட்டில் பழுத்து ரணிலின் மடியில் விழும் என்றே அப்போது தோன்றியது.

ஆனால் இப்போது யாவற்றையும் குழப்பி, தமக் குத் தாமே தலையில் மண் அள்ளிப் போட்டு கொண் டாரோ ரணில் என்று எண்ணும் நிலைமை ஏற்பட் டிருக்கின்றது.

தெற்கின் பிரதான கட்சிகள் பலவும் வேறு வழியின்றி ரணிலுக்குப் பின்னால் அணிவகுப்பது காலத்தின் கட்டாயம் என்பது போல அப்போது தோற்றியது. ஆனால் இப்போது எல்லாக் கட்சிகளும் அவையவற்றின் அரசியல் நிலைப்பாடு, சுயாதீனம், போக்குக் கருதி ரணிலிலிருந்து தள்ளி நின்றாக வேண்டும் என்ற அரசி யல் கட்டாயத்தை ரணிலே ஏற்படுத்தியிருக்கின் றார்.

அவரை ஜனாதிபதிப் பதவிக்கு வேறு வழியின்றி அழைத்து வந்த ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன கூட அவரிலிருந்து தள்ளி நிற்கும் கட்டாய நிலைமையை அவரின் போக்கு ஏற்படுத்தி விட்டது.

அவரது ஜனாதிபதிப் பதவி நிலையைக் கருதி, அதனை வாய்ப்பாகக் காட்டி, அவரது பழைய கட்சியினரை - இப்போது ஐக்கிய மக்கள் சக்தியில் இருப்பவர்களை - அவருடன் இணங்கி, இணைந்து போகச் செய்ய மேற்கொண்ட முயற்சிகளும் ரணி லின் அணுகுமுறைப் போக்கினால் தடம் புரண்டு போய்விட்டன.

ரணிலுடன் நிற்க வேண்டிய - நிற்கக் கூடிய - பல தரப்புகள் இப்போது அவரிலிருந்து அந்நியப்படுத் தப்பட்டு தள்ளி, விலத்தி, புறமொதுக்கி, வைக்கப் பட்டு விட்டன.

அத்தகைய கட்சிகள், தரப்புகள்,சக்திகள் ரணிலை எதிர்த்து ஒன்றிணையும் அரசியல் புறநிலையையும் கூடத் தமது எதேச்சாதிகார அரசியல் செயற்பாடு கள் மூலம் ஏற்படுத்தி வருகின்றார் ரணில் விக்கிரம சிங்க.

ரணிலை வீழ்த்துவதற்காகத் தென்னிலங்கைத் தரப்புக்கள் ஒன்றுபட வேண்டியமை காலத்தின் கட்டாயம் என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எம்.பி. விடுத்திருக்கும் அழைப்பு இந்தப் பின்புலத்தில்தான் முக்கியமானதாகின்றது.

## மொட்டுக் கட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷக்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவரும் நாடா ளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இரத்தினபுரி பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீ னமாக செயற்படும் மேலவை இலங்கை கூட்டணியின் உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் ஒன்றி ணையக் கோரிக்கை விடுத்துள்ளனர் எனப் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப் பிடுவது அடிப்படையற்றது.

விலகிச் சென்றவர்கள் மீண்டும் ஒன்றிணையலாம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனதான் எம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ராஜபக்ஷக்களுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை எமக்கு கிடையாது.அரசியலில் நாங்கள் தனித்து சிறந்த முறையில் செயற்படுகிறோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிளவுப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறந்த முறையில் அரசியல் காய் நகர்த்தலை முன்னெடுக்கிறார்.

அரசாங்கத்தில் அமைச்சு பதவி வகிக்கும் ஒரு தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவும், அமைச்சு பதவி இல்லாத பிறிதொரு தரப்பினர் பஷில் ராஜபக்ஷவுக்கு ஆதரவாகவும் செயற்படுகிறார்கள்.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் பரந்துப்பட்ட அரசியல் கூட்டணியை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுத் துள்ளார்.

ஆகவே விலகி சென்றவர்களை மீண்டும் இணைப் பதற்கு முன்னர் இருப்பவர்களை பொதுஜன பெரமுன தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

மக்களால் புறக்கணிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கி,நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு பொதுஜன பெரமுன துணை செல்கிறது.

69 இலட்சம் மக்களாணைக்கும், ஜனாதிபதியின் கொள் கைக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடு காணப்படுகி றது. ஆகவே பொதுஜன பெரமுனவே தவறை திருத்திக் கொள்ள வேண்டும்.- என்றார்.

## தங்காலையில் சூடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவரே இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் எனத் தங்காலை பொலிஸார் தெரிவித்தனர்.

## திக்வெல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

பின்னர் சந்தேகநபர் மோட்டார் சைக்களில் தப்பிச் சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## எம்.பி. பதவிகளைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டமை மற்றும் அதனடிப்படையில் தங்களை நாடாளுமன்ற உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்டுள்ள தீர்மானம் ஆகியவற்றைச் செல்லுபடியற்றதாக்குமாறு கோரி இந்த மனுக்கள் தாக் கல் செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்க ளாகத் தெரிவு செய்யப்பட்ட மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் அணி மாறி ரணில் பக்கம் சாய்ந்து அமைச்சர்களானார்கள். அண்மையில் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவிலும் சேர்க்கப்பட்டனர்.

இந்தப் பின்புலத்திலேயே அவர்களைக் கட்சியிலி ருந்தும் நாடாளுமன்ற உறுப்புரிமையிலிருந்தும் நீக்கும் முடிவை ஐக்கிய மக்கள் சக்தி எடுத்திருந்தது.

அந்த முடிவுகளுக்கு எதிராகவே இப்போது இருவரும் உயர்நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளனர்.

# ஒரு வருடத்தில் நாட்டை விட்டு 1,139 டாக்டர்கள் வெளியேற்றம்

கரவனெல்ல, தெஹியத்தகண்டிய, மஹாஓயா மற்றும் கல்முனை பிரதேசத்தில் உள்ள பல வைத்தியசாலைகளில் மயக்க மருந்து நிபுணர்கள் இல்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 12 மாத காலப் பகுதியில் 842 சிரேஷ்ட வைத்திய அதிகாரிகளும் 274 விசேட வைத்தியர்களும் 23 அவசர சிகிச்சை நிபுணர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என சங்கத்தின் பேச்சாளர் டாக்டர் திரு. சமில் விஜேசிங்க ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறும் பிரச்சினைக்கு அரசு உடனடியாக உரிய தீர்வைக் காணாமல் விட்டால் சுகாதாரத் துறையே கடுமையான வீழ்ச்சியைச் சந்திக்கும் என்றும் அவர் கூறினார்.

## 6 மாதங்களில் 600 விரிவுரையாளர்கள் வெளியேற்றம்!

# அரச பல்கலைக்கழகக் கட்டமைப்பில் இப்போது சுமார் 6,000 வெற்றிடங்கள்

கடந்த 6 மாதங்களில் 600 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர் எனப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தற்போது அரச பல்கலைக்கழக கட்டமைப்பில் சுமார் 6,000 வெற்றிடங்கள் காணப்படுகின்றன என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால், அரச பல்கலைக்கழக முறைமையும் படிப்படியாக நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது எனவும் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இந்த வருடம் மே மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஒரு வருட காலப்பகுதியில், 274 விசேட வைத்திய நிபுணர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 842 வைத்திய அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# ஐக்கிய காங்கிரஸ் கட்சி செயலர் மீது தாக்குதல்!

(பாறுக் ஷிஹான்)

ஐக்கிய காங்கிரஸ் கட்சி தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத்தின் மகனும் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் செயலாளருமான ஷாஹிட் முபாறக்(வயது-28) மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புற நகர் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இவர் தனது வாகனத்தில் மனைவியுடன் சென்று கொண்டிருந்த வேளை இனந்தெரியாத இருவர் தாக்குதல் மேற்கொண்டு விட்டுத் தலைமறைவாகியுள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவர் தற்போது கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்திலும் இந்தச் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



தாக்குதலுக்கு உள்ளானவர் அண்மைக் காலமாகத் தமது கட்சி நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்பட்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கரைவலைகளில் கீரி மீன்களை வாரி அள்ளும் கல்முனை,சாய்ந்தமருது, காரைதீவு மீனவர்கள்



பாறுக் ஷிஹான்

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக அதிகளவான கீரி மீன்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப் பிராந்தியக் கடற்கரைகளில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வளையா, சூரை, கிளவல்லா என்ற மூன்று வகையான மீன்களே கரைவலைகள் மூலம் பிடிக்கப்பட்டு பல லட்சம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இப்போது நேற்று மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் கல்முனைப் பகுதிகளில் கரைவலைகளில் கீரி இன மீன்கள் அதிகளவாப் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கீரி மீன்கள் 1 கிலோ சுமார் 400முதல் 500 ரூபா வரை விற்பனையாகின்றன. பெருவாரியாக இவை பிடிபடுகின்றமையால் மீனவர் வருமானமும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மருதமுனை, கல்முனைக் கடற்கரையை ஒட்டி கரைவலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி, தூண்டில் முறை என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இப்போது கரைவலை மீனவர்களுக்கு இவ்வாறான சிறிய, பாரிய மீன்கள் பெருந்தொகுதியாகப் பிடிபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதே வேளை கிளவால், வளையா சூரை போன்ற மீன்களும் விற்பனை செய்யப்படுகின்றன. வளையா மீன் ஒரு கிலோ 1,600 ரூபாவாகவும், கிளவால் 1 கிலோ 2,000 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ‘13’ஐ நடைமுறைப்படுத்த இடமளிக்கவே மாட்டோம்!

## விமல் வீரவன்ஸவின் கட்சி உறுதி



அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை ஒருபோதும் இட மளிக்கமாட்டோம். உண்மையான நாட்டு பற்றாளர்கள் அதி கார பகிர்வு விவகாரத்தில் தமது நிலைப்பாட்டை நாட்டு மக்க ளுக்கு உறுதியாக பகிரங்கப்படுத்த வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

விமல் வீரவன்ஸாவின் கட்சியான தேசிய சுதந்திர முன்ன ணியின் எதுல்கோட்டை பகுதியில் உள்ள காரியாலயத் தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

இலங்கையின் அயல் நாடான இந்தியாவுடன் இணக்க மாக செயற்பட தயார் என மக்கள் விடுதலை முன்னணி யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிடுகின்றமை ஆச்சியரியமாக உள்ளது.

1987 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி இந்தியாவுடன் இணக்கமாக செயற்பட்டிருந்தால் 60 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டிருக்கமாட்டார்கள். நாட்டில் இனக்கலவரம் என்பதொன்று தோற்றம் பெற்றிருக் காது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமை யாக அமுல்படுத்துமாறு இந்தியா இலங்கைக்கு தொடர்ந்து அழுத்தம் பிரயோகித்த வண்ணம் உள்ளது.

1987 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருந்த அரச தலைவர்கள் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வில்லை. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கவில்லை.

போராட்டத்தின் ஊடாக ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த முயற்சிக்கிறார்.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்கி துப்பாக்கி அதிகாரத்துக்கு பதிலாக மாற்று அதிகாரங்களை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

ஜனாதிபதியின் தந்திர செயற்பாட்டை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஆகவே மாகாணங்களுக்கு பொலிஸ் அதி காரங்களை பகிர்ந்தளிக்க வேண்டிய தேவை ஏதும் கிடை யாது.

13ஆவது திருத்த விவகாரத்தில் போலியான தேசப்பற் றாளர்கள் அனைவரும் மௌனித்துள்ளார்கள். தேசியத்தை முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்த அனைவரும் 13 ஆவது திருத்த விவகாரத்தில் தமது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும்.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த நாங்கள் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம் என்பதில் எவ்வித மாற்றுக் கருத் தும் கிடையாது என்பதை நாட்டு மக்களுக்கு உறுதியாக குறிப்பிட்டுக் கொள்கிறோம். - என்றார்.

# நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் விஜேரத்ன ராஜினாமா

நலன்புரி நன்மைகள் சபையின் தலை வர் பதவியில் இருந்து தாம் இராஜினாமா செய்துள்ளார் என பி.விஜேரத்ன தெரிவித் துள்ளார்.

தனது இராஜினாமாக் கடிதம் நிதி ய மைச்சின் செயலாளர் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக் கப்பட்டுள்ளது என்றார்.

கடிதத்தின் பிரதியொன்று ஜனாதி பதி செயலாளருக்கும் அனுப்பி வைக் கப்பட்டுள்ளது எனவும் பி.விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.




Singhams Media
அலை ஓசை
துல்லியமான ஒலிநயத்துடன் உங்கள் நிறுவனங்களின் பெயர்களை ஒலிபரப்பு செய்து கொள்ள நாடுங்கள்.
திருநெல்வேலி பகுதியில்.
ஆடியபாதம் வீதி, திருநல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 076 610 5467, 077 124 2732




# Pearl Island Inn

## Hotel & Restaurant

Dine - in | Take Away | Soft Drinks

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com




# அரசாங்க சேவைகளுக்கு ஆள்சேர்ப்புக்கு 2024 பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு இல்லை!

## நிதி அமைச்சு அறிவிப்பு

2024 ஆம் ஆண்டில் அரச சேவைக்கான ஆள்சேர்ப்புக ளுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட மாட்டாது என நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்ட மதிப் பீடுகளை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை அமைச்சுக ளுக்கு வழங்கிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அடுத்த ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டில் புதிய நிர்மாணப்பணிகளும் உள்ளடக்கப்பட வில்லை.

இதேவேளை, அரச நிறுவனங்களுக்காக வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் 2024ஆம் ஆண்டிலும் அமுலில் இருக்கும் என வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களுக்கான புதிய தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பாகங்கள் கொள்வனவு செய்யப்படுவது இயலுமானவரை மட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது, குறைந்தபட்ச உள்ளீடுகள் மூலம் மாற்றத்தை ஏற்படுத்து வது ஒவ்வொரு அரசு நிறுவனங்களின் பொதுவான இலக் காக இருக்க வேண்டும் என நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை பாரிய பொருளா தார நெருக்கடியை எதிர்கொள்வதுடன், இது கடுமையான, நீண்ட கால, பரந்தளவிலான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தும் என நிதி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் பொது நிதி இலக்குகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத் தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் பேரண்ட பொருளாதார மாற்றங்கள் உள்ளிட்ட சீர்திருத்தங்களை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

2048 ஆம் ஆண்டளவில் அதிக வருமானம் பெறும் நாடாக மாறுவதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன எனவும் முதல் 05 வருடங்களில் இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் நிதி அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஒன்றித்த நாட்டுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம். நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகத்திற்கும் சுயமரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டும். இன்று இவை அச்சுறுத்தலுக்குள்ளாகி இருக்கின்றன.

மகா சங்கத்தினரின் கருத்துக்களை யும் ஆலோசனைகளையும் சிறந்த முறை யில் பெற்றுக்கொண்டு, பாதகமான காரணிகளை நீக்கி, சாதகமான காரணி களுடன் சமய சேவை,சமூக சேவை மற்றும் முற்போக்கு அரசியல் பய ணத்தை முன்னெடுக்கும் சக்தியாக ஐக்கிய மக்கள் சக்தி திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

“விழுமியமிக்க சமூகத்துக்கான பிக் குகள் ஆலோசனை பேரவையின்” இரண்டாம் கட்டம் நேற்று காலி மாவட் டத்தை இலக்காக் கொண்டு காலி நகர சபை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே சஜித் பிரேமதாஸா இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் பத்தாயிரத்து எண்பத்தி ஒன் பதுக்கும் மேற்பட்ட விகாரைகளும், பத்தா யிரத்து பதினெட்டுக்கும் மேற்பட்ட தஹம் அறநெறிப் பாடசாலைகளும் 800 க்கும் மேற்பட்ட பிரிவினாக்களும் உள்ளன. ஒவ்வொரு மதஸ்தான நிறுவனத்தின் ஆற்றலை சமய மேம்பாட்டுத் திட்டங்க ளுக்கு மாற்றும் வகையில் செயல்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித் தார்.

கடந்த கால ஆட்சியாளர்களின் பணி யாற்றுகைகளைப் பார்த்து ஐக்கிய மக்கள் சக்தியின் பயணத்தை மதிப்பிட வேண்டாம் என மதிப்புக்குரிய மகாசங்கத்தினரிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு வழிபாட்டுத் தலத்திலும் சமய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படும். சமய வழிபாட்டுத் தலங்களுக்கு சமய நிதியமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு சன்மார்க்க சமுதாயத்தை உருவாக்க உதவுவோம்.

இளைஞர்களுக்கான மையமாகவும், மத நல்லிணக்கத்திற்கான இடமாகவும், மேம்பட்ட படித்த நவீன தலைமுறையின் இடமாகவும், தொழில்நுட்ப ஆற்றல் வாய்ந்த

ஷதலைமுறையினரின் மையமாகவும் மத வழிபாட்டுத் தலங்களை உருவாக்க வேண்டும்.

நவீனத்துவப் பார்வையின் மூலம், அனைத்து விடயப் பரப்புகளுக்குமான கொள்கை வகுப்புக் குழுக்கள் அமைக் கப்பட்டு, கொள்கை வகுப்பாக்கங்களை தயாரிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள் ளன. பௌத்த அறநெறிக் கல்வியை மேம்படுத்த விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

விகாரைகள் எதிர்நோக்கும் பிரச்சி னைகளுக்கு தீர்வு காண வேலைத்திட் டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. மத வழிபாட்டுத் தலங்களில் சூரிய மின்சக்தித் திட்டத்தை வெறுமனே கூறாமல் யதார்த் தமாக நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

ஒன்றித்த நாட்டுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரப் பரவலாக்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம்.

ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண தேசிய ஒற்றுமை மிகவும் அவசியம். நாட்டின் அனைத்து பிரஜைகளும் சமமாக கருதப்பட்டு ஒவ்வொரு சமூகத்திற்கும் சுயமரியாதையுடன் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

அரசமைப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள விசேட இடம் எப்போதும் பாதுகாக்கப்படும். அதேநேரம் ஏனைய மதங்களும் சமயங்களும் பாதுகாப்பாக இருக்க செயற்பட வேண்டும்.

நாட்டில் பிளவு ஏற்பட்டால், நாட்டின் தேசிய பாதுகாப்பு பற்றி பேசுவதில் அர்த்த மில்லை. அந்தப் பிரிவினையை இல்லாதொழிக்க வேண்டும்.

நாட்டின் ஒருமைப்பாட்டிற்காக அனைத்து மக்கள் சமூகங்களும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். அந்த இலக்கை நோக்கி ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் செயற்படும்.

புத்தசாசன அமைச்சும் புத்தசாசன நிதியமும் ஜனாதிபதி ரணசிங்க பிரேம தாஸவினால் நிறுவப்பட்டவை சகோதர ஏனைய மதங்களை பாதுகாப்பதற்கா கத் தனியான அமைச்சுகளை அவரே நிறுவினார்.

மிஹிந்தலை புனித பூமியை 24 மணித்தியாலங்கள் இருளில் மூழ்க டித்து வைத்ததன் மூலம் தற்போதைய அரசாங்கம் அரசமைப்பை அப்பட்டமாக மீறியுள்ளது. 75 வருடங்களாக அரசி யல்வாதிகள் ஆளுங்கட்சியில் இருக்கும் போதுதான் சேவையாற்றினர் .அவ்வப் போது இருந்த எதிர்க்கட்சிகளும் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசையில் மட்டுமே செயல்பட்டன.

நான் ஏன் ஜனாதிபதிப் பதவியை ஏற்கவில்லை எனப் பலரும் விமர்சிக்கின் றனர். திருடர்களை வைத்து அரசி யல் செய்ய வேண்டும் என்ற அச்சத் தாலும்,வெட்கத்தாலும்தான் நான் ஜனா திபதி பதவியை ஏற்கவில்லை.

புதிய மக்கள் ஆணையின்றி நாட்டின் பொறுப்பை ஏற்க மாட்டேன். மகா சங்கத்தி னரின் ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொண்டு கொள்கைகளை மதித்து கொள்கைசார் தூய்மையான பய ணத்தை மேற்கொள்ளத் தயார். - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அங்கு தெரிவித்தார்.

# 'கொவிட்' காரணமாக நிறுத்தப்பட்ட வீட்டுத் திட்டங்கள் மீண்டும் ஆரம்பம்

## வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தெரிவிப்பு



'கொவிட்' மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுத்தப்பட்ட வீட்டுத் திட்டங்கள் உடனடியாக மீள ஆரம்பிக்கப்படும் என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனையின் பேரில் இதற்கான திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன என்று தலைவர் குறிப்பிட்டார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையை ஸ்தாபித்ததன் முக்கிய நோக்கம் இந்த நாட்டின் வறிய மக்களுக்கு வீடு ஒன்றைக் கட்டிக் கொடுப்பதாகும்.

நாட்டில் இன்னும் பல வீடற்ற குடும்பங்கள் உள்ளன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் செவன நிதியத்தின் கீழ் மிகவும் வறிய குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவிகள் வழங்கப்படுகின்றன. மேலும், அரச ஊழியர்களுக்கு "சேவாபிமானி" என்ற கடன் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி, அவர்களுக்கு 14 வீத வட்டியில் 10 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பெயர்களில் பல வீட்டுத் திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இவற்றில் 93,000 வீடுகள் கட்டி முடிக்கப்படவுள்ளன. அதற்கு சுமார் 24,000 மில்லியன் தேவை. இதுவரையில் எமது விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஊடாக ஜனாதிபதிக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் பணம் கிடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஆனால் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் அந்த பணம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு, எங்கள் நிறுவனம் கடன் வசூல் மூலம் மாதந்தோறும் சுமார் 150 மில்லியன் வசூலித்தது. அந்தத் தொகை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப் போதாது. இதற்காக மாதந்தோறும் 150 மில்லியன்செலவிடப்படுகிறது. மாவட்டமுகாமையாளர்களை வரவழைத்து அவர்களுக்கு மாதாந்திர இலக்கு கொடுத்தோம். நாங்கள் திறைசேரியில் இருந்து பணத்தை எதிர்பார்க்க முடியாது. எனவே எங்களிடம் கடன் பெற்றவர்கள் விரைவில் பணத்தை எங்களிடம் திருப்பித் தருமாறு கேட்டுக்கொள்கிறோம். அந்த பணத்தைப் பெற்றுத் தான் நாம் மற்றவருக்கு கொடுப்பது. இதுவரை, கடனை வசூலிப்பதில் இருந்து படிப்படியாக 300, 350, 400 மில்லியனை எட்டியுள்ளோம். அதிலிருந்து ஒரு நிதியை உருவாக்கியுள்ளோம். அதன் மூலம் நிறுத்தப்பட்ட கடன் திட்டங்களை மீண்டும் தொடங்கினோம்.

நாட்டில் உள்ள அனைத்து காணிகளையும் ஒரே இடத்தில் வழங்கும் புதிய வேலைத்திட்டத்தை ஜனாதிபதி அறிமுகப்படுத்தியுள்ளார். அதுசெயல்பட்டால், பிரச்சினைகளை குறைத்து வீடுகளை கட்டலாம். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிகளுக்கு எமது அமைச்சு நிறைய ஆதரவை வழங்குகிறது.– என்று தெரிவித்துள்ளார்.

# மேர்வின் இனவாதமாகப் பேசும் நிலையை ஏற்படுத்தியவர்கள் தமிழ் கூட்டமைப்பினரே!

## ஐக்கிய காங்கிரஸ் கட்சி தலைவர் தெரிவிப்பு



(நூருல் ஹுதா உமர் )

வடக்கு – கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிராக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா இனவாதமாக பேசும் நிலையை ஏற்படுத்தியவர்கள் தமிழ் கூட்டமைப்பினரே என்று ஐக்கிய காங்கிரஸ் கட்சி தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

வடமாகாணத்தில் பௌத்த மத ஸ்தலங்களுக்கு சேதம் ஏற்படுத்தினால் அங்குள்ளோரின் தலைகளை களனிக்கு கொண்டு வருவேன் என மேர்வின் கூறியது மிக கடுமையான தவிர்க்க வேண்டிய வார்த்தை. இருப்பினும் அவரது சமூக அக்கறை என்று பார்க்கும் போது இந்த நிலைக்கு அவரை ஆக்கிய தமிழ் அரசியல்வாதிகளே பொறுப்பேற்க வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ நாசமாக்கிய நாட்டை ஜனாதிபதி ரணில் கொஞ்சம் கொஞ்சமாக நிமிர்த்திக் கொண்டிருக்கையில், நாடு அமைதியாக இருக்கும் போது இந்த நாட்டில் அடிக்கடி இனவாதச் சூட்டை உருவாக்குவது தமிழ் கட்சிகள்தான்.

சிங்களவர்களும் முஸ்லிம்களும் தமக்கு நேரத்துக்கு சாப்பாடு கிடைத்தால் மட்டும் போதும் என்றிருக்கும் போது 13 வேண்டும், வடக்கு கிழக்கு இணைக்க வேண்டும், ஜனாதிபதி இனப்பிரச்சினை பற்றி பேச வேண்டும், சமஷ்டி வேண்டும் என தமிழ் இனவாத கட்சிகள் கூப்பாடு போடுவதால் சிங்களவர்களும் முஸ்லிம்களும் இக்கருத்துக்களை எதிர்க்க வேண்டியுள்ளது.

போதா குறைக்கு சாணக்கியனும் ஆளுனர் தொண்டைமானும் தம் முட்டாள்தனமான இனவாத காட்டுமிராண்டி செயலால் சும்மா குறட்டை விட்டு தூங்கும் கிழக்கு முஸ்லிம்களையும் உசுப்பேத்தி விட்டார்கள்.

இத்தகைய இனவாதக் கருத்துக்கள் அதிகரித்ததால் காணாமல் போயிருந்த மேர்வின் சில்வாவும் வாளோடு கிளம்பி விட்டார். அவர் இந்தளவு பேச வழி சமைத்தது தமிழ் கட்சிகள்தான் என்பதை மறுக்க முடியாது. மேர்வினின் பேச்சில் பல உண்மைகள் உள்ளன. போகிற போக்கில் தமிழ் கூட்டமைப்பினர் மேர்வினை எம்பியாக்கி விடுவர் போலுள்ளது.

நாட்டில் இனங்களுக்கிடையில் சூடேற்றுவதை சகலரும் தவிர்த்து அனைத்து மக்களினதும் அடிப்படை பிரச்சினையான பொருளாதார முன்னேற்றத்துக்கு முயற்சிக்க வேண்டும்.– என்று தெரிவித்துள்ளார்.

# கணவனையும் பிள்ளையும் கைவிட்டு சென்ற இளம்பெண்ணுக்கு மறியல்

## மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவு

(க.சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள பிரதேசத்தில் 3 வயதுடைய குழந்தையின் தாயாரான 21 வயதுடைய இளம் பெண் ஒருவர் அவரது கணவனை விடுத்து, 22 வயது இளைஞன் ஒருவருடன் திருமணம் கடந்த உறவில் ஈடுபட்டு வந்த நிலையில், அதையொட்டிய சர்சையை அடுத்துக் கைது செய்யப்பட்டார் .

அந்தப் பெண்ணை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

இந்தப் பெண் சிறு வயதாக இருக்கும் போது இளைஞன் ஒருவரை காதலித்துத் திருமணம் முடித்து இருவரும் கணவன் மனைவியாக வாழ்து வந்துள்ள நிலையில் அவர்களுக்குக் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

இந்த நிலையில் கணவருக்குத் தொழில் வாய்பு இல்லாததையடுத்து அவர் வேலைவாய்பு பெற்று, மத்திய கிழக்கு நாட்டிற்குச் சென்று, அண்மையில் திரும்பி வந்துள்ளார். ஆனால், அப்பெண் அந்தப் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் ஒருவருடன் திருமணம் கடந்த உறவில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரியவந்தது.

இதனையடுத்து, அந்த இளைஞனுடன் தொடர்பு வேண்டாம் எனப் பல தடைவைகள் கணவர் தெரிவித்து வந்த நிலையில் இரு தினங்களுக்கு முன்னர் கணவரையும் குழந்தையையும் வீட்டையும் விட்டு விட்டு அந்த இளைஞருடன் அப்பெண் சென்றுள்ளார் எனக் கூறப்படுகின்றது. அவருக்கு எதிராகப் பொலிஸ் பெண்கள் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அவர் நேற்று முன்தினம் விசாரணைக்கு பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டார். விசாரணைக்கு வந்த பெண், தாம் அந்த 22 இளைஞருடன் செல்லப்போகிறார் எனத்தெரிவித்து பொலிஸாரைக் கடமையைச் செய்யவிடாது அவர்களைத் தாக்கமுற்பட்டமையுடன், பொலிஸ் நிலையக் கட்டட ஜன்னல் கண்ணாடியை தாக்கினார் எனவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து அவரைப் பொலிஸார் கைது செய்தனர். அந்தப் பெண் அவரது 3 வயதுச் சிறு குழந்தையைப் பராமரிக்காமல் விட்டு சென்றமை மற்றும் பொலிஸாரைக் கடமையைச் செய்யவிடாது தடுத்தமை போன்ற பல குற்றச் சாட்டுகளின் கீழ் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து, மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் அவரைப் பொலிஸார் ஆஜர்படுத்தினர். அவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# மேர்வின் போன்றோர் நாட்டின் சாபக்கேடு!

## வைகிறார் சந்திரகுமார்



மிக மோசமான யுத்தத்தை கடந்து வந்தள்ள நாட்டில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும், சமத்துவத்தையும் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் தலையில் எதுவுமில்லாதவர்கள் போன்று மேர்வின் சில்வா கருத்து தெரிவித்திருப்பது கண்டனத்திற்குரியதும், கவலைக்குரியதுமாகும் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்தள்ளார்.

வடக்கில் விகாரைகள் மீதோ அல்லது பிக்குகள் மீதோ கை வைத்தால் தமிழர்களின் தலைகளுடன் களனிக்குத் திரும்புவேன் என மக்கள் மத்தியில் வெறுப்பையும் இனக்குரோதத்தையும் ஏற்படுத்தும் வகையில் அவர் பேசியிருப்பது தலையில் எதுவும் இல்லாதவர்களின் பேச்சு போன்றே அமைந்துள்ளது. இந்த நாட்டில் இன்னும் நிலையான அமைதி நிலாவாமைக்கு ஒவ்வொரு இனத்திற்குள்ளும் மேர்வின்

சில்வா போன்றவர்கள் இருப்பதே காரணமாக இருக்கிறது. இவர்கள் இந்த நாட்டின் சாபக்கேடுகள்.

ஒவ்வொரு இனத்திற்குள்ளும் இருக்கின்ற மேர்வின் சில்வா போன்றவர்கள் சமூகத்திலிருந்து அகறப்பட வேண்டியவர்கள். வெறுப்பு பேச்சுக்கள், அப்பாவி மக்களிடம் இனவாதத்தை தூண்டிவிடுகின்ற செயற்பாடுகள், இந்த நாட்டை ஒரு போதும் நிரந்தர அமைதியை நோக்கி கொண்டு செல்லா. ஆகவே பொது மக்கள் மேர்வின் சில்வா போன்றோரின் கருத்துக்களுக்கு இடம்கொடுக்காது நிதானமாகச் சிந்தித்து, நாட்டை நிலையான அமைதிக்கும் முன்னேற்றத்திற்கும் கொண்டு செல்லும் வகையில் செயற்பட வேண்டும். அனைத்து இனங்களுக்கிடையேயும் நல்லிணக்கமும், சமத்துவம் உருவாக்கப்பட வேண்டும். – என்றும் அவர தெரிவித்தார்.

# துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஆடிச் செவ்வாய் இறுதி நாள்







யாழ்ப்பாணம் வரலாற்று பிரசித்தி வாய்ந்த தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில்

ஆடிச் செவ்வாய் இறுதி நாளில் நேற்று மாலை அம்மனை முத்துச் சப்பறத்தில் வெளி வீதிஉலா எடுத்து வருவதையும் அம்மனின் அருள் வேண்டி கலந்து கொண்ட பக்தர்களையும் படத்தில் காணலாம்.

# 5 ஆண்டுகளில் உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியா திகழும்!

## - பிரதமர் நரேந்திர மோடி சுதந்திர தின உரை



அடுத்த 5 ஆண்டுகளில் உலகின் மிகப்பெரிய 3 பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு டில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிய பிரதமர் நரேந்திர மோடி, பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே இதனை கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா தற்போது உலகின் முன்னணி நாடாகத் திகழ்கிறது. எனது குடும்பத்தில் உள்ள 140 கோடி மக்கள் நேற்று சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறார்கள். நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட அனைவருக்கும் நான் எனது அஞ்சலியை செலுத்துகிறேன்.

மணிப்பூர் மக்களுக்கு ஆதரவாக நாடு இருக்கிறது. அங்கு அமைதி நிலவ வேண்டும். அமைதியின் மூலமே தீர்வு காண முடியும். தீர்வு காண்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன. இம்முறை இயற்கைப் பேரிடர் நாட்டின் பல பகுதிகளில் கற்பனை செய்ய முடியாத பாதிப்புகளை உருவாக்கி இருக்கிறது. இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் எனது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டில் ஏராளமான வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. முடிவில்லாத வாய்ப்புகளை வழங்கும் திறன் நமது நாட்டிற்கு உண்டு. கொவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு புதிய உலக வரிசை, புதிய புவிசார் அரசியல் உருவாகி வருகிறது. 140 கோடி மக்களின் திறன், உலக வரிசையை மாற்றி வருவதை காணலாம். இந்தியாவின் திறன் மற்றும் சாத்தியக்கூறுகளால் நமது நாடு புதிய உச்சத்தைக் காண்பது உறுதி. ஜி 20 உச்சி மாநாட்டை நடத்தும் வாய்ப்பு இந்தியாவிற்குக் கிடைத்திருக்கிறது. இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலும் ஜி 20 அமைப்பின் பல்வேறு நிகழ்வுகள் நடந்த விதம், இந்தியாவின் எளிய மக்களின் திறனையும், நாட்டின் பன்முகத்தன்மையையும் உலகிற்கு உணர்த்தி இருக்கிறது.

சீர்திருத்தம், செயல்பாடு, மாற்றம் ஆகியவை நாட்டை மாற்றி வருகின்றன. 2014 இல் ஆட்சிக்கு வந்தபோது உலக பொருளாதாரத்தில் இந்தியா 10 ஆவது இடத்தில் இருந்தது. 140 கோடி மக்களின் முயற்சியால் நாம் தற்போது 5 ஆவது இடத்திற்கு வந்துவிட்டோம். நாட்டை தன் பிடிக்குள் வைத்திருந்த ஊழல் அரக்கனைத் தடுத்து, நாட்டின் பொருளாதாரத்தை வலுவான நிலைக்குக் கொண்டு வந்துள்ளோம். அடுத்த 5 ஆண்டுகளில் நாடு உலகின் மிகப் பெரிய 3 பொருளாதாரங்களில் ஒன்றாக உருவெடுக்கும். இது நரேந்திர மோடியின் வாக்குறுதி என்று தெரிவித்துள்ளார்.

# நாம் தமிழர் கட்சியின் பொதுச்செயலாளர் தடா நா.சந்திரசேகரன் இயற்கை எய்தினார்!

நாம் தமிழர் கட்சியின் பொதுச் செயலாளர் தடா நா.சந்திரசேகரன் இயற்கை எய்தியுள்ளார்.

இதனை நாம் தமிழர் கட்சியின் தலைமை அலுவலகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தலைமை அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிடுகையில், தமிழ்த் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பேரன்பையும், பெரும் நம்பிக்கையையும் பெற்ற பெருந்தகை. விடுதலைப் புலிகளுக்காக தமிழகத்தில் துணிந்து வழக்காடிய சட்டத்தரணி.

இன விடுதலைக் களத்தில் முன்னோடியாக நின்று எங்களை வழிநடத்திய



பெருமகன். நாம் தமிழர் கட்சியின் பொதுச்செயலாளர். பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய மூத்தவர் ஐயா தடா நா.சந்திரசேகரன் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் மறைவெய்தினார் எனும் துயரச் செய்தியை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஐயாவின் மறைவையொட்டி, பெருந்துயரின் அடையாளமாக கட்சியின் அனைத்து மாவட்ட, தொகுதி, நகரம், வட்டம், கிளை அலுவலகங்களிலும், பாசறை அலுவலகங்களிலும், கட்சியின் அனைத்து கொடிக் கம்பங்களிலும் கட்சிக்கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள் என செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈக்வடோரில் மற்றுமொரு அரசியல் தலைவர் கொலை!





ஈக்வடோரில் மற்றுமொரு அரசியல் தலைவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தென் அமெரிக்க நாடான ஈக்வடோரில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் கடந்த 9 ஆம் திகதி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட ஜனாதிபதி வேட்பாளர் பெர்னாண்டோ படுகொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் ஈக்வடோரில் மற்றுமொரு அரசியல் தலைவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரபேல் கொரியாவின் குடிமக்கள் புரட்சி கட்சியை சேர்ந்த தலைவரான பெட்ரோ பிரையோன்ஸ் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டார்.

அவர் சான்மேடியோ நகரில் வீட்டில் இருந்த போது உந்துருளியில் வந்த இரண்டு மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ரஷ்யாவில் உள்ள எரிபொருள் நிலையத்தில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் 35 பேர் பலி!






ரஷ்யாவின் தெற்கு பகுதியில் உள்ள எரிபொருள் நிலையம் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் 35 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், பலர் காயமடைந்துள்ளனர்.

கஸ்பியன் கடலின் கடற்கரையில் உள்ள தாகெஸ்தான் பிராந்திய தலைநகரான மகச்சலாவில் இந்த வெடிப்பு சம்பவம் பதிவாகியுள்ளது,

எரிபொருள் நிலையத்திற்கு அருகிலுள்ள வாகனம் திருத்தும் நிலையத்தில் முதலில் தீ விபத்து ஏற்பட்டது என அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

மேலும் இந்த வெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித் துள்ளார்.

இதேவேளை, டகெஸ்தானில் உள்ள கும்டோர்கலின்ஸ்கி மாவட்டத்தில் அவசரகால நிலை பிரகடனம் செய்யப் பட்டுள்ளது என அந்த பிராந்தியத் தலைவர் அறிவித்துள்ளார்.

## 16 வயது சிறுவனை திருமணம் செய்த 41 வயது பெண்!



இந்தோனேஷியாவை சேர்ந்த 41 வயது பெண் 16 வயது சிறுவனை திருமணம் செய்த புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் தற்போது வைரலாகி வருகிறது. அங்குள்ள மேற்கு கலிமந்தன் பகுதியை சேர்ந்தவர் மரியானா. 41 வயதான இவர் அப்பகுதியில் கடை நடத்தி வருகிறார். இவரது கடைக்கு அருகே வசித்து வருபவர் லிசா. இவரது 16 வயது மகன் கெவின் தின்பண்டங்கள் வாங்குவதற்காக மரியானாவின் கடைக்கு அடிக்கடி சென்று வந்துள்ளார்.

அப்போது இருவருக்குமிடையே காதல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மரியானா கெவின் மீது தீவிர காதல் கொண்டு அவரை திருமணம் செய்ய முடிவு செய்தார். ஆனால் தன்னை விட 25 வயது சிறியவனை திருமணம் செய்ய அவரது தாயார் சம்மதிப்பாரா என்ற சந்தேகம் மரியானாவுக்கு ஏற்பட்டது.

ஆனால் தனது தோழியான மரியானாவுக்கு தனது மகனை திருமணம் செய்து வைக்க லிசாவும் சம்மதித்தார். இருவரும் திருமணம் செய்து கொண்ட புகைப்படங்கள் சமூக வலைதளத்தில் வைரலாகி சர்ச்சையை ஏற்படுத்தியது.

# 75 ஆவது பஸ்ஸை அன்பளிப்புச் செய்தார் சஜித்!





**(நூருல் ஹுதா உமர், ஐ. எல். எம். நாஸிம்)**

எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தி தலைவருமான சஜித் பிரேமதாச 'சக்வல-பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் 75 ஆவது பஸ்ஸை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு அன்பளிப்பு செய்யும் நிகழ்வு நேற்று (14) திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை அமைப்பாளர் எம்.ஏ. ஹஸனலின் முயற்சியால் இந்த பஸ் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்ஸை விளினையடி சந்தியிலிருந்து - பழைய கல்முனை வீதி - பூமரத்துச் சந்தி ஊடாக தேசியக் கல்லூரி வளாகம் வரைஎதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஓட்டிச் சென்றார்.

இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர் நஜீபா ரஹீமிடம் பஸ்ஸைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர், சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் தலைவர் ஐ. எல்.எம். மாஹீர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஐ. எல். எம். ஹனிபா சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் எஸ். எம்.எம். எஸ். உமர் மௌலானா, ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை அமைப்பாளர் எம்.ஏ. ஹஸனலி, உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.



# மாகாணத் தமிழ்த் தின போட்டிக்குத் தெரிவு!

**(வி.பிரசாந்தன்)**

நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட வட்டகொட தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் கடந்த வாரம் (11.08.2023) தலவாக்கலை த.ம.வித்தியாலயத்தில் இடம்பெற்ற வலய மட்ட தமிழ் மொழித் தின நிகழ்வில் விவாத போட்டியில் முதலாம் இடத்தினை பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்களை பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் சார்பாக வாழ்த்தியுள்ளனர்.

# குளவிக் கொட்டுக்கு இலக்கான முதியவர் ஒருவர் உயிரிழந்தார்

குளவி கொட்டுக்கு இலக்கான முதியவர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (13) உயிரிழந்துள்ளார்.

நவாலி வடக்கு, மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 70 வயதுடைய நடராசா சந்திரமோகன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த முதியவர் காணி ஒன்றினை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளார் .

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலம் இன்று செவ்வாய்க்கிழமை (15) உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# ஒலிம்பியாட் போட்டியில் தேசிய ரீதியில் சாதனை!



**( வி.ரி.சகாதேவராஜா)**

கல்வி அமைச்சு நடத்திய சர்வதேச ஒலிம்பியாட் கணித போட்டியில் தேசிய மட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய மாணவி செல்வி சிவரூபன் ஜினோதிகா தங்கப் பதக்கம் பெற்று மகத்தான சாதனை படைத்துள்ளார்.

நேற்று (14) திங்கட்கிழமை மாலை இந்தப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன.

கடந்த வாரம் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நடைபெற்ற தேசிய போட்டியில் யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயம் வித்தியாலய மாணவன் ஆர்.ஆருஜன் 50 புள்ளிகளை பெற்று முதலிடத்தையும் தங்கப்பதக்கத்தையும் சுவீகரித்தார்.

45 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாணத்தின் சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய மாணவி செல்வி சிவரூபன் ஜினோதிகா இரண்டாம் இடத்தில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

இது சம்மாந்துறை வலயத்தில் சர்வதேச ஒலிம்பியாட் சரித்திரத்தில் முதல் சாதனையாகும்.

அதுவும் ஒரு பின்தங்கிய பிரதேசத்தில் ஏழ்மையான சூழலில் இந்தத் தேசிய சாதனை படைத்தமை அனைவராலும் பாராட்டப்படுகிறது.

வித்தியாலய முதல்வர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன் இந்த மாணவியை மிகவும் பாராட்டியுள்ளார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானாவும் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

# சர்வதேச இளைஞர் தின கரப்பந்தாட்டம்

## அக்கரைப்பற்று அணி வெற்றிவாகை





(எம். எப். நவாஸ்)

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தால் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் பீ.எம்.றியாத்தின் வழிகாட்டலில் கரப்பந்தாட்ட போட்டி 12 திகதி சனிக்கிழமை காலை முதல் மாலை வரை அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இளைஞர் கழகங்கள் போட்டியில் மோதிக்கொண்டன.

அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழகம் முதலாம் இடத்தைப் பெற்றதுடன் அட்டாளைச்சேனை இளைஞர் கழகங்கள் இரண்டாம், மூன்றாம், நான்காம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

இதில் பங்குபற்றிய அணியினருக்கு வெற்றி கிண்ணம் மற்றும் விளையாட்டுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹிஜா முஸாபிர், கௌரவ அதிதிகளாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலக் உதவிப் பணிப்பாளர் யூ.எல்.ஏ.மஜீத் மற்றும் அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் அலியார் முபாறக் அலி ஆகியோரும் அதிதிகளாக அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் எம்.டி.எம்.ஹரூன், இறக்காம பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம். அஸ்வத், ஐக்கிய மக்கள் சக்தியின் வரிசைப்படுத்தல் படையின் திகாமடுல்ல மாவட்ட பணிப்பாளர், ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அணியின் தேசிய செயற்குழு உறுப்பினர், அம்பாறை மாவட்ட செயலாளர் றிஸ்கான் முகம்மட், அட்டாளைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர் எம். எப்.நவாஸ் , இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம்.சர்பான், நுஜா ஊடாக வலையமைப்பின் தலைவர் எஸ்.எம்.அரூஸ், அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவர் ஏ.சீ.எம். றிப்கான் மற்றும் இளைஞர் கழகங்களின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பேலியகொடை அபிவிருத்தித் திட்டத்தை மேல்மாகாண திட்டத்துக்குள் உள்ளடக்குக

## வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்பு

பேலியகொடை நகர அபிவிருத்தித் திட்டத்தை மேல்மாகாண அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கத பேலியகொடை நகர அபிவிருத்தித் திட்டத்தை மேல்மாகாண அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கத் தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் உரிய அபிவிருத்தி திட்ட அறிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். இதன் பிரகாரம் பேலியகொடை நகர அபிவிருத்தித் திட்டம் அடுத்த வருட ஆரம்பத்தில் நடைமுறைக்கு வரும் என்றார்.

பத்தரமுல்லை, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் இன்று (15) இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

கொழும்புக்கு மிக அருகில் அமைந்துள்ள பேலியகொடை நகரம் கொழும்புடன் இணைந்து விரைவான அபிவிருத்தியை அடைந்துள்ளது. களனி கங்கையின் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளதால், தொடர்ந்து வெள்ள அபாயத்தை எதிர்நோக்கி வருகிறது.

பேலியகொடை நகரில் அதிக மக்கள் தொகை அடர்த்தி காரணமாக, வீட்டுப் பிரச்சினை மற்றும் பல சமூக மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

பேலியகொடை நகரை இனிய நகரமாக மாற்றி மக்கள் எதிர்நோக்கும் வெள்ள அச்சுறுத்தலுக்கு தீர்வு காணப்பட வேண்டும். மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கும் உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும்.

இதன்படி பேலியகொடை நகரில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட வேண்டும்.

அரச மற்றும் தனியார் துறைகளின் கூட்டுத் திட்டமாக இதனை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டும்.

பேலியகொடை நகரத்தின் ஊடாக செல்லும் மக்களின் வசதிக்காக பேலியகொடை மெனிங் சந்தைக்கு அருகில் பல உணவகங்களை அமைப்பதற்காக இலங்கை காணி மீட்பு கூட்டுத்தாபனம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இரண்டு காணிகளை பேலியகொடை நகர சபை அடையாளம் கண்டுள்ளது.

இது தொடர்பில் அந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் – என்றார்.

இராஜாங்க அமைச்சர்களான சிசிர ஜயகொடி, பிரசன்ன ரணவீர, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்த, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத், இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரிய, பேலியகொடை நகர சபையின் செயலாளர் தரங்கா கம்லத் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.08.2023




இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல. உங்களின் சில சௌகரியங்களை நீங்கள் விட்டுக் கொடுக்க நேரும்.

பணிச்சூழல் கடினமாகக் காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. சிறப்பாக திட்டமிட்டு முன்னுரிமைப் படி பணிகளை ஆற்ற கற்றுக்கொள்ளுங்கள்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப் படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இதனை தவிர்த்தல் நலம்.

வீட்டின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பிற்காக பணத்தை செலவு செய்வீர்கள். தேவையற்ற செலவுகளால் பண இழப்பு ஏற்படும்.

உங்கள் தாயின் ஆரோக்கியம் குறித்த செலவுகள் அதிகரிக்கும். அதிக பணம் செலவு எய்ய நேரும்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கு உகந்த நாள். வாழ்க்கையின் யதார்த்தத்தை புரிந்து கொள்வீர்கள். புதிய அனுபவங்கள் கிடைக்கும். மகிழ்ச்சி காணப்படும்

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. நீங்கள் செய்யும் பணியில் திருப்தி காண்பீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். இதனால் உங்கள் பிரியமானவரிடத்தில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். பணத்தை முறையாக பயனுள்ள வழியில் செலவு செய்வீர்கள்.

அமைதியாக இருப்பதன் மூலம் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலும்.




ஆன்மீக பயணங்களுக்கு உகந்த நாள். உங்கள் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும். பொறுமையுடன் இருந்தால் நல்லதே நடக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும். பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரிடும்.

உங்களின் வருத்தமான உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். இன்று சுறுசுறுப்பாக இருந்து உங்கள் துணையுடன் வசீகரிக்கும் வகையில் பழகுவது நல்லது.

நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று உங்கள் தந்தையின் உடல் நலததுக்காக பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று சிறந்த அடித்தளத்தை அமைப்பதற்கும் நல்ல தரத்தை உருவாகுவதற்கும் அதிக சிந்தனை செய்வீர்கள். உணர்ச்சி வசப்படாமல் உங்களை காத்துக்கொள்ளுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடன் சிக்கல்கள் வராமல் இருக்க அவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் அதிலிருந்து விலகி இருங்கள். உங்கள் துணையுடனான அணுகுமுறையில் அமைதியும் கட்டுப்பாடும் தேவை.

அதிக வருமானம் சம்பாதிப்பது இன்று கடினமாக காணப்படும். பணப்புழக்கத்தை தக்க வைத்துக் கொள்வதற்கான நிலைத்தன்மை குறைந்து காணப்படும்.




இன்று அதிர்ஷ்டத்தை அதிகமாக நம்பாதீர்கள். கடினமாக உழைத்து பலனிற்கு காத்திருங்கள். இசை கேட்டல் திரைப்படம் பார்த்தல் போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் மன அமைதி பெறுங்கள்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்றப் பிரச்சினை காணப்படும். இந்தப் பிரச்சினைகளை தீர்த்து மகிழ்வுடன் வாழுங்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். உங்களிடம் இருக்கும் பணத்தை தக்க வைத்துக் கொள்வது நல்லது.

இன்று சுமாரான ஆரோக்கியம் காணப்படும்.தோல் ஒவ்வாமை மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உற்சாகமான நாள். புதிய வளர்ச்சிப் பாதையில் முன்னேறுவீர்கள். உங்கள் செயல்களை திட்டமிட்டு முறையாக செய்தால் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் நல்ல பெயரும் புகழும் அடைவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்புவசப்பட்டு காணப்படுவீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் சேமிப்பும் வாழ்க்கை தரமும் உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று நீடித்த முயற்சிகள் எடுக்க வேண்டும். இன்று செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். உயர்ந்த நிலையில் இருப்பீர்கள்.

பணியில் அர்ப்பணிப்பு தேவை. யோசித்து வேலை செய்ய வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பழகுவீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

பண வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. வங்கியிருப்பை சிறப்பாக பராமரிப்பீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தேக ஆரோக்கியம் உறுதியாக இருப்பதை உணர்வீர்கள்.




உங்கள் உணர்சிகளை கண் காணிக்க வேண்டும். பொறுமையும் நம்பிக்கையும் தேவை. நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றியை நோக்கி பயணிக்கலாம்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். பணியை கவனமுடன் ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். சரியான நேரத்தில் பணிகளை முடிக்க வேண்டும். பணியில் நற்பெயர் கிடைக்கும்.

விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையாரின் கருத்துக்கும் மதிப்பு கொடுப்பதன் மூலம் அனைத்தும் சிறப்பாக நடக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவினங்களை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலையைத் தரும். உங்கள் செலவுகளை முன்கூட்டியே திட்டமிடுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.08.2023




இன்று சிறிது அசௌகரியத்தை உணர்வீர்கள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

இன்று பணிச்சுமை காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செயல்படுத்துவது சிறந்தது.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை சகஜமாக வெளிப்படுத்த வேண்டியது அவசியம். உங்கள் துணையிடம் அமைதியான அணுகுமுறையை மேற்கொள்ளுங்கள்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். சிறிய கடன்கள் வாங்கி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

ஒவ்வாமை காரணமாக இன்று சளி மற்றும் இருமலால் பாதிப்படைவீர்கள்.




இன்றைய நாள் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படும். இன்று அதிர்ஷ்டம் காணப்படும். அதனால் திருப்தி உண்டாகும். உங்களை விட மூத்தவர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

புத்துணர்ச்சியோடு பணி புரிய வேண்டும். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

இன்று உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் வாழ்க்கை பற்றி உங்கள் துணையிடம் கலந்தாலோசிபீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் நண்பர்களிடமிருந்து எதிர்பாராத பரிசாக பணம் கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்களின் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாளாக அமையும். உங்களை முன்னேற்றிக் கொள்வதற்கு உகந்த மன நிலையில் காணப்படுவீர்கள். திருப்தி காணப்படும். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். பணியில் நேர்மையாக இருப்பீர்கள். சிறந்த அர்ப்பணிப்போடு பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை நட்பு முறையில் பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும். அன்பு அதிகரிக்கும்.

பண வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு பணம் காணப்படும்.




இன்று உங்கள் செயல்களில் தவறுகள் நேராமல் இருக்க பொறுமை அவசியம். இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து நடைபெறும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவை பராமரிக்க வேண்டியது அவையம்.

உங்கள் துணையுடன் நல்ல உறவை பராமரிக்க அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறு நடந்தால் உறவு மலர்ந்து மணம் வீசும்.

ஆன்மீக பயணத்துக்குப் பணத்தை செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்களை பரிசோதிக்க வேண்டும்.பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park